## இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் - 2015

---

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கம் தவிர, இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 32 பந்தியின் பிரகாரம் தேவையான போது அல்லது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் மூலம் இடமளிக்கப்படும் சந்தர்ப்பம் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றிக்கு ஒன்று ஈடு செய்யப்படக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் உப ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய கணக்கின் வரவு மீதிகளும் செலவு மீதிகளும் ஒன்றுக்கென்று எதிரீடு செய்யப்பட்டமையால் கடன்கொடுத்தோர் செலவு மீதி ரூபா 110,764,584 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02**

நியமத்தின் பிரகாரம் இருப்பு மதிப்பிடும் போது இருப்புக் கிரயம் அல்லது தேறிய நிகர பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதியில் இருப்பு மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு கணிப்பிடும் போது தேறிய நிகர பெறுமதியின் (NRV) 92.5 சதவீதம் கிரயம் எனக் கருதிய முடிவுப்பொருள் பெறுமதி மதிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சரியான கிரயம் இனங்காணப்படாமல் இருப்பு மதிப்பீடு செய்த காரணத்தினால் இருப்பு குறைவாகவோ அல்லது மிகை கணிப்பீடொன்று இடம்பெறலாம் என அவதானிக்கப்பட்டது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நடைமுறையல்லாத சொத்தக்களுக்காக பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாதன் காரணமாக ரூபா 68,197,875 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிச்சயமாக இனங்காணக்கூடிய கடப்பாடுகளுக்காக நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த 02 வழக்குகளுக்கு திட்டவட்டமாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 16,234,441 ஆன கடப்பாடுகளுக்காக நிதிக்கூற்றுக்களில் எவ்வித ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய செலுத்தப்படாத பெறுமதி சேர் வரிக்குரிய ரூபா 121,782,475 ஆன தண்டப்பணம் மற்றும் 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 6,941,026 தண்டப் பணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) பணிக்கொடை கொடுப்பனவு தாமதத்தின் பேரில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,008,204 தண்டப்பணத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் அப் பெறுமானத்தினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏழாம் மாடியின் வட பகுதி இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு கட்டிடங்களை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்க வேண்டிய மொத்த வருமானம் ரூபா 8,461,726 ஆக இருந்த போதிலும், அது ரூபா 9,172,403 என கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் நடைமுறைச் செத்துக்கள் மற்றும் ஆண்டின் நட்டம் ரூபா 710,677 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை சீமெந்து கம்பனிக்கு ஏழாம் மாடியின் வட பகுதி வாடகைக்கு வழங்கியதற்காக 2014 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்காக குத்தகை வாடகையாக முறையே ரூபா 2,130,566 ஆலும் ரூபா 2,934,180 ஆலும் குறைத்துக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் அவ்வாண்டுகளின் நட்டம் கூடுதலாகவும் பெறவேண்டிய சொத்துக்கள் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக 06 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 996,342 ஆன தேறிய இலாபம் பின்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இலாபத்திற்கு சீராக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் நட்டம் அப்பெறுமானத்தினால் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டிற்குரிய இனங்காணப்பட்ட மேலதிக வேலைகள் (Extra Works) 2015 ஆம் ஆண்டிற்காக முன்கொண்டு வராப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 2,119,798 ஆல் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

(உ) நிர்மாணப் பிரிவிற்குரிய 07 வேலைத்தளங்களில் இயந்திராதிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் (E&M) பிரிவிற்குரிய ஒரு வேலைத்தளத்தில் பல வருடங்களாக இருந்து வரும் ஒப்பந்தங்களுக்குரிய மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 11,030,827 கிரயமொன்று காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்குரிய ரூபா 1,355,242 ஆன இலாபம் இனங்காணப்படாத காரணத்தினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய இலாபம் அப்பெறுமானத்தால் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) ஒப்பந்தப் பெறுமதியை விஞ்சி செலவு செய்யப்பட்டிருந்த 03 வேலைத்தளங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக சீராக்கப்பட்ட வருமானம் (Adjusted Income) இனங் காணப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் திரட்டிய கிரயம் ரூபா 8,366,810 ஆன நட்டமொன்றாக இனங்காணப்பட்ட காரணத்தினால் ஆண்டின் நட்டம் ரூபா 389,529 ஆல் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) அங்கொடை வீடமைப்பு செயற்திட்டத்திற்குரிய 2 இறுதி இருப்பு உருப்படிகள் இருமுறை கணக்கிடப்பட்ட காரணத்தினால் இறுதி இருப்பு ரூபா 396,206 ஆல் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஏ) இரத்மலான களஞ்சியத்தில் காணப்பட்ட 18 மர இருப்பு உருப்படிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) வேலைத்தள இலக்கம் 1,099, 237 மற்றும் 343 என்பவற்றில் 2014 ஆம் ஆண்டில் மெதுவாக அசையும் இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள N (ஓராண்டிற்கு குறைவு) என வகைப்படுத்தப்பட்டுள்ள உருப்படி 2015 ஆம் ஆண்டிலும் அவ்வாறே காணப்பட்டதுடன், அந்த இருப்பு N1 (ஓராண்டிற்கு மேற்பட்டதாக) வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த மெதுவாக அசையும் இருப்பின் பெறுமதி ரூபா 11,451,602 ஆக இருந்தமையால் அதன் மீது 15 சதவீதமான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் இருப்பின் பெறுமதி ரூபா 1,717,740 ஆல் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் நட்டம் அப் பெறுமானத்தால் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஒ) கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம் 343 மற்றும் 237 ஆம் இலக்க வேலைத்தளங்களில் முடிவுப் பொருள் இருப்பு மதிப்பிடும் போது ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக (NI) மற்றும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக (N2) காணப்பட்ட உருப்படிகளில் 2015 ஆம் ஆண்டின் மெய்மையாய்வு பெறுமதி 2014 ஆம் ஆண்டின் பெறுமதியை விட ரூபா 677,338 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் நட்டம் அப்பெறுமானத்தால் குறைத்தும் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் கூடுதலாகவும் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஓ) வேலைத்தளத்தின் பிரகாரம், சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 3,967,410,436 பெறுமதியுடனான கிரயப் பதிவேட்டில் ரூபா 1,433,820 ஆன பெறுமதியான செலவு மீதி அவதானிக்கப்பட்டதுடன் விற்பனைக் கிரயம் அப்பெறுமதியால் குறைவாக இருந்தது.

(ஔ) கடன்பட்டோர் கைதவிர்ப்பிற்கான ஒதுக்கீடு தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது கடன்பட்டோர் மீதிகள் காண்படாத மற்றும் உள்ளவாறான கடன்பட்டோர் மீதியை விஞ்சி ரூபா 74,584,331 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(க) காணிக் கையேற்றல் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு கையேற்கப்பட்டிருந்த 13 ஏக்கர் 03 ரூட் 35 பேர்ச் அளவிலான ஏக்கலவில் அமைந்துள்ள காணியின் பெறுமதி மீளாய்வாண்டின் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பௌதீக இருப்பு மீதிகள் பின்அட்டை மீதிகளுடன் ஒப்பிடும் போது 149 பின் அட்டைகளுக்குரிய இருப்பு உருப்படிகளின் பெறுமதிக்கிடையே ரூபா 5,297,373 ஆன பற்றாக்குறையொன்றும் 57 பின் அட்டைகளுக்குிய ரூபா 3,243,713 மிகையொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைகள் கட்டணம் ரூபா 19,903,480 ஆக இருந்த போதிலும் பட்டோலையின் பிரகாரம் அம்மீதி ரூபா 6,767,360 ஆக இருந்தமையால் ரூபா 13,136,120 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) இயந்திர மின்சாரப் பிரிவில் (E&M) சேஜ் கணனி மென்பொருளின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு தேய்விற்கான ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி ரூபா 117,697,607 ஆக இருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் அம்மீதி ரூபா 117,687,606 ஆக இருந்தமையால் ரூபா 10,000 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தனியாள் கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக பதிவினை சரியாக இனங்காணப்படாமையால் கடன்பட்டோர் மீதியில் ரூபா 106,981,333 ஆன அசாதாரண செலவு மீதியொன்று உருவாகியிருந்தது.

(உ) இயந்திராதிகள் மற்றும் உபபாகங்கள் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பெறுமதி ரூபா 173,856,115 ஆக இருந்ததுடன் இறுதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 197,876,934 ஆக இருந்தமையால் ரூபா 24,020,819 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஊ) நிர்மாண உபபாகங்கள் பிரிவிற்கும் இயந்திரம், மின்சாரம் மற்றும் இயந்திராதிகள் பிரிவிற்கும் (M&E) உரிய 02 வேலைத்தளங்களில் மீளாய்வாண்டிற்கான கிரயம் ரூபா 223,839 மறை பெறுமதியொன்றாக காண்பிக்கப்பட்டதுடன் இந்த அசாதாரண மீதி ஏற்பட்ட முறை தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) கடன்பட்டோர் மீதிகள் உறுதிப்படுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 05 நிறுவனங்களின் தகவல்களின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கடன்பட்டோர் மீதி மற்றும் அந்தந்த நிறுவனங்களிடமிருந்து சமர்ப்பிக்கப்பட்ட கடன்மீதிகளுக்கு இடையே ரூபா 283,475,081 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நிறுவகத்தின் பெயர் | கூட்டுத்தாபனத்தின் மீதி | கடன்பட்டோர் மீதிகள் உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீதி வேறுபாடு | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பிக்குகள் பல்கலைக்கழகம் | 35,899,936 | 47,957,674 | 12,057,738 |
| நகர அபிவிருத்தி அதிகாரசபை | 165,502,006 | 62,641,518 | 102,860,488 |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | 186,960,033 | 49,392,149 | 137,567,884 |
| அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம் | 6,866,665 | 4,838,593 | 2,028,072 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 66,806,000 | 37,845,101 | 28,960,899 |
| மொத்தம் | | | 283,475,081 |

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | வங்கி நடைமுறைக் கணக்குகள் - 02 | 213,835 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | நிர்மாணம், இயந்திராதிகள் மற்றும் சேவை பிரிவிற்குரிய வங்கிக் கணக்கு | 18,693,422 | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கூற்று |
| (இ) | செயலற்ற வங்கிக் கணக்கு – நேபாளம் | 1,880,176 | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி உறுதிப்படுத்தல்கள், வங்கிக் கணக்கிணக்கம் |
| (ஈ) | சேவைப் பிரிவின் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய பெறுமதி | 543,895,470 | விரிவான பட்டோலைகள் |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தின் ஏழாம் மாடியின் தெற்கு பகுதி சீமெந்து கம்பனிக்கு வாடகைக்கு வழங்கல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஏழாம் மாடியின் தெற்கு பகுதி, 2007 சனவரி 01 ஆந் திகதி முதல் 2008 திசெம்பர் 31 ஆந் திகதி 02 ஆண்டு காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக 2007 மார்ச் 08 சீமெந்து கம்பனியுடன் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அக்காலப்பகுதியை விஞ்சி 2015 யூன் மாதம் வரை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக நிலுவை வாடகை பெறுமதி ரூபா 20,362,650 தொகை மற்றும் அதற்கு மேலதிகமாக ரூபா 3,458,495 ஆன மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், இப்பணத்தை அறவிடவதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை சீமெந்து கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த இடஅளவு 2,976 சதுர அடியாக இருந்த போதிலும், அக்கம்பனியால் உள்ளவாறாக பயன்படுத்தப்பட்ட இடஅளவு 3,175 சதுர அடிகளாக இருந்தன. அதன் பிரகாரம் மேலதிகமாக பயன்படுத்தப்பட்ட 199 சதுர அடிக்காக 2007 ஆம் ஆண்டிலிருந்து 2015 யூன் 30 ஆந் திகதி வரை ரூபா 1,596,878 ஆன வருமானம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iii) 2006 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னிருந்து வரும் நிலுவை நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களுக்காக ரூபா 690,610 தொகை இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தின் ஏழாம் மாடியின் வட பகுதியை இலங்கை சீமெந்து கம்பனிக்கு வாடகைக்கு வழங்குதல்.

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தின் ஏழாம் மாடியின் வட பகுதி, 2007 சனவரி 01 ஆந் திகதி முதல் 2009 திசெம்பர் 31 ஆந் திகதி 03 ஆண்டு காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை காலத்தை விஞ்சி 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 7,609,925 தொகை கணக்காய்வுத் திகதியான 2016 சனவரி 08 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த சதுர அடி அளவு 2,222.37 ஆன போதிலும், இலங்கை சீமெந்து கம்பனி 2,365 சதுர அடி அளவினைப் பயன்படுத்தியிருந்ததுடன் அதன் பிரகாரம் மேலதிகமாக பயன்படுத்தப்பட்டிருந்த 142.63 சதுர அடி அளவிற்காக 2007 ஆம் ஆண்டிலிருந்து 2012 திசெம்பர் வரை ரூபா 756,722 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விசேட முற்பணம் ரூபா 5,649,349 ஆன மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன அதில் ரூபா 5,163,834 ஆன மீதி 03 அண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்வதற்கு நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 3 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டிருந்ததுடன், கடன்கொடுத்தோர் மீதி ரூபா 15,589,164 மற்றும் 5 ஆண்டுகளை விஞ்சிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 348,682,368 ஆக இருந்த போதிலும் அம்மீதிகளை தீர்வுசெய்வதற்கு பொருத்தமான நடவடிக்கையொன்றினை நடப்பாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3,455,828,381 ஆன வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் 95 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவொன்று அரச நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அதில் ரூபா 1,074,632,091 அதாவது மொத்த பெறுமதியில் 33 சதவீதம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலாவதியான மீதிகளாக இருந்தது. இத்தொகையை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் கடன்பட்டோராக குறிப்பாக இனங்காணப்படாத ரூபா 7,444,055 ஆன நானாவித கடன்பட்டோராக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அம்மீதிகளை இனங்கண்டு அறவிடுவதற்கு அல்லது தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நிதிப் பிரமாணத்தின் 217 இன் பிரகாரம் ஏதேனும் நிதியாண்டில் கொடுப்பனவு செய்வதற்கிருந்த பணம் முழுவதையும் இயலுமான வரை அவ்வாண்டிலேயே கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும் தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 3 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரை ரூபா 98,311,491 கூட்டுத்தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 96,452,897 தொகையும் உப ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அட்டுறுச் செலவினம் மற்றும் ஏனைய ஒதுக்கீட்டு மீதியில் பல வருடங்களாக இருந்து வரும் ரூபா 55,525,662 ஆன மீதிகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) நிர்மாண மற்றும் நிர்மாண உப பாகங்கள் பிரவினால் மேற்கொள்ளப்பட்ட 05 செயற்திட்டங்களுக்காக இலங்கை கிரிக்கட் நிறுவகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 818,462,729 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம் இவ்வாறு அறவிட வேண்டிய பெறுமதி இலங்கை கிரிக்கட் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 567,601,808 ஆக இருந்தது.

(ஐ) உப ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 248,519,329 தொகை கொடுப்பனவு செய்து 5 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அவற்றை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் | 2015 ஆம் ஆண்டிற்குரிய பெறமதி சேர் வரி ரூபா 88,165,979 தொகையை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி வருமானச் சட்டத்தின் 114 ஆம் பந்தி | உபகாரக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டிய ரூபா 132,959 ஆன உழைக்கும் போது செலுத்தும் வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணங்கள் (திருத்த) சட்டத்தின் பந்தி இலக்கம் 02 | காலாண்டிற்கு ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட வருமானம் உழைக்கும் நிறுவகத்தினால் காலாண்டிற்கு கூடியது ரூபா 30 மில்லியனுக்கு மேற்படாத வகையில் காலாண்டு அடிப்படையில் வருமானத்தின் 0.25 சதவீதமான பொருளாதார சேவைகள் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். எனினும் கூட்டுத்தாபனத்தினால் 2015 ஆம் ஆண்டில் உழைக்கப்பட்ட வருமானமான ரூபா 3,168,016,408 இற்குரிய கணக்காய்வின் கணிப்பிடலின் பிரகாரம் செலுத்த வேண்டிய ரூபா 7,920,041 ஆன பொருளாதார சேவைகள் கட்டணங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>(i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட போதிலும் தீர்வயாகாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,524,787 பெறுமதியான 28 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2015 தசெம்பர் 09 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | சுற்றறிக்கை பிரகாரம் குறித்த திகதியில் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் போது 2,492 ஊழியர்களுக்காக ரூபா 8,421,000 தொகை உபகாரக் கொடுப்பனவுகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2009 யூலை 01 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் தகவல் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பாக புறம்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ஏ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் | 2006 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் வாழ்க்கை செலவுப் படியினை கருத்திற்கொள்ளாமல் கொடுப்னவு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 184.7 மில்லியன் கூட்டுத்தொகை மற்றும் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு முறையே ரூபா 21,336,900 மற்றும் ரூபா 5,334,225 தொகையும் நிதியத்திற்கு குறைத்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. |
| (ஐ) | 1979 திசெம்பர் 20 ஆந் திகதிய இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் விநியோகிக்கப்பட்ட 12/1979 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(இ) பந்தி | கட்டளையுடன் காசோலை முற்பணங்களை வழங்கியதன் பின்னர் 30 நாட்களுக்குள் அந்த முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும், வழங்கப்பட்ட ரூபா 68,191,290 கூட்டுத்தொகையான முற்பணம் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் இருந்தன. |


## 3. நிதி மீளாய்வு


### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 744,581,777 தேறிய நட்டமொன்றாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 74,534,988 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது தேறிய இலாபம் 819,116,765 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டு மற்றும் வருமானம் ரூபா 4,235,402,252 ஆல் குறைவடைந்திருந்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 206,152,011 ஆன மிகை மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 744,581,777 ஆன பற்றாக்குறையொன்றாக மாறியிருந்தது. மேலும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரச வரி மற்றும் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் 2011 ஆம் ஆண்டில் ரூபா 589,687,734 ஆன நேர் பெறுமதியொன்றாக காணப்பட்ட பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 218,214,484 மறைபெறுமதியாக மாறியிருந்தது.

கடந்த 04 ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்தின் வருமானம், தேறிய சொத்துக்கள், தேறிய இலாபம் மற்றும் தேறிய இலாபத்தின் விலகல் பின்வரும் வரைபுகள் மூலம் முன்வைக்கப்பட்டிருந்தது.




## 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பேரில் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட முக்கிமான கணக்கீட்டு விகிதங்கள் சில பின்வருமாறு இருந்தன.

| கணக்கீட்டு விகிதம் | 2014 | 2015 |
|---|---|---|
| | சதவீதம் | சதவீதம் |
| மொத்த இலாபம் | 2.63 | (25.23) |
| தேறிய இலாப விகிதம் | 0.63 | (22.37) |
| விற்பனையின் கிரயத்தின் மீது நிர்வாகச் செலவினம் | 5.24 | 8.64 |
| விற்பனையின் மீது தேறிய நிதிச் செலவினம் | 0.81 | 1.96 |
| நடைமுறை விகிதம் | 1.04 | 0.98 |
| விரைவு விகிதம் | 0.99 | 0.92 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக தேறிய இலாப விகிதம் 1059 சதவீதத்தினாலும் தேறிய இலாப விகிதம் 3650 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விற்பனையின் மீது தேறிய நிதிச் செலவினம் 65 சதவீதத்தினாலும் தேறிய நிதிச் செலவினம் 142 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(iii) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நடைமுறை விகிதம் 1.04 முதல் 0.98 வரையும் விரைவு விகிதம் 0.99 முதல் 0.92 வரை குறைவடைந்திருந்தது.

(iv) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனைக் கிரயம் வருமானத்தின் சதவீதமாக கருதும் போது 97 சதவீதத்திலிருந்து 125 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளுக்கு இடையே நிதி விளைவுகளை கருதும் போது 2011 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் வரிக்குப் பின்னரான இலாபம் தொடர்ச்சியாக குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அது 1,098 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மொத்த விற்பனைக் கிரயம் மற்றும் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் முறையே 57 சதவீதத்தினாலும் 1,621 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது வருமானம் ரூபா 3,168,016,408 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது அது ரூபா 4,235,402,252 ஆல் அதாவது 57 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது சம்பளம், வேதனங்கள் படிகள், ஒப்பந்த உழைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய செலவினமாக செலவிடப்பட்டிருந்து மொத்த செலவினம் ரூபா 1,753,310,158 ஆக இருந்ததுடன் அது மொத்த கிரயத்தின் 44 சதவீதமாக இருந்தது.

(ஊ) நிர்மாணப் பிரிவின் (Construction) உழைப்புக் கிரயம் மொத்த கிரயத்தின் சதவீதமாக 46 சதவீதமாகவும் நிர்மாண உதிரிப்பாகப் பிரிவின் (Construction Component) 35 சதவீதமாகவும் இயந்திர மற்றும் மின்சாரப் (M&E) பிரிவின் 51 சதவீதமாகவும் மதியுரை பிரிவின் (Consultancy) 92 சதவீதத்தினாலும் இயந்திர மற்றும் உபபாகங்கள் (E&M) பிரிவில் 57 சதவீதமாகவும் இருந்தன.

(எ) ஒப்பந்த பெறுமதியை விஞ்சிய கிரயம் இடம்பெற்றதன் கரணமாக 2015 ஆம் ஆண்டில் 52 செயற்திட்டங்களிலிருந்து கிடைத்த திரட்டிய நட்டம் ரூபா 803,367,009 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) நிர்மாணப் பிரிவிற்குரிய 06 வேலைத்தளங்களின் 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை நட்டம் அடைந்திருந்ததுடன் இந்நட்டம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 61,745,058 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------------

### 4.1 செயலாற்றல்

-----------------------------------

1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான நோக்கங்கள் அச்சட்டத்தின் 3(2) பந்தியின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் 2008 மார்ச் 28 ஆந் திகதிய 1543 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி மூலம் கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(i) சுயாதீனமாக அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கம்பனியுடன் இணைந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்குரிய சிவில் பொறியியல் மற்றும் ஏனைய பொறியியல் செயற்திட்டங்களைப் புலனாய்வு செய்தல், திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் என்பவற்றை செயற்படுத்துதல் மற்றும் அவ்வாறான கம்பனிகளை கையேற்றல் மற்றும் பங்குகளை வாங்குதல்.

(ii) பொறியியல் துறையில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கம்பனிகளுக்கு சுயாதீனமாக அல்லது ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கம்பனியுடன் இணைந்து மதியுரை சேவைகளை வழங்குதலும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதலும் அவ்வாறான கம்பனியை கையேற்றலும் பங்குகளை வாங்குதலும்.

(iii) சுயாதீனமாக நிறுவனமொன்றாக அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனமொன்றுடன் இணைந்து ஆதனங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அல்லது அவ்வாறான கம்பனிகளின் பங்குகளை கொள்வனவு செய்தல்.

(iv) உள்நாட்டிலோ மற்றும் வெளிநாட்டிலோ முன்னரே தயாரிக்கப்பட்ட கொங்கிரீட், பொருத்தப்பட்ட கொங்கிரீட் மற்றும் கெங்கரீட் உற்பத்தி செய்தலும் விற்பனை செய்தலும்

(v) பொறியியல் செயற்திட்டங்களோ அல்லது வியாபாரமொன்றையோ பராமரித்துச் செல்வதற்காக கட்டிட பொருட்கள், இயந்திரங்கள் பொறிகள மற்றும் உபகரணங்கள் உற்பத்தி செய்தல், சந்தைப்படுத்தல், இறக்குமதி செய்தலும் ஏற்றுமதி செய்தலும்

(vi) மேலே குறிப்பிடப்பட்ட (i), (ii), (iii), (iv) மற்றும் (v) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நோக்கி தேவையான பொறியியல் மற்றும் ஏனைய தொழில்வல்லுனர்களை பயிற்சியளித்தல்.

(vii) மேலே குறிப்பிடப்பட்ட (i), (ii), (iii), மற்றும் (iv) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நோக்கி பயன்படுத்தப்படு கட்டிடப்பொருட்கள், நிர்மாணம் மற்றும் தொழில் வல்லுனர்கள் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கை செயற்பாடுகளில் ஈடுபடல்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்மாணிப்பு பிரிவு

(i) இரத்மலான அலுமினயத் தொழிற்சாலை (வேலைத்தள இலக்கம் 6001)

நிர்மாணப் பிரிவிற்குரிய மேற்குறித்த தொழிற்சாலையின் வருமானம் 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் 62 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், முன்னைய ஆண்டில் ரூபா 1.79 மில்லியனான செயற்பாட்டு நட்டம் ரூபா 4.18 மில்லியனான நட்டம் வரை 133 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக உப ஒப்பந்த உழைப்புச் செலவினம் அசாதாரணமாக அதிகரித்தமை இந்நிலைமை தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

(ii) மாளிகாவத்த இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் வேலைத்தளம் (வேலைத்தள இலக்கம் 828)

மாளிகாவத்த இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் வேலைத்தளத்தில் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வருமானம் 84 சதவீதத்தினால் விழ்ச்சியடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டில் ரூபா 0.22 மில்லியனான செயற்பாட்டு நட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 4.95 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) நிர்மாண உதிரிப்பாகங்கள் பிரிவு

(i) முன்கலவை வேலைத்தளம் - (வேலைத்தள இலக்கம் 343)

இவ்வேலைத்தளத்தில் கடந்த ஆண்டில் ரூபா 3.51 மில்லியான செயற்பாட்டு இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 33.67 ஆன செயற்பாட்டு நட்டமொன்றாக மாறியிருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வருமானம் 49 சதவீதத்தால் குறைவடைந்தமையும் விற்பனைக் கிரயமல்லாத செலவினம் 12 சதவீதத்தினால் அதிகரித்தமை இந்நிலைமைக்கு தாக்கமளித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ii) தங்கொட்டுவ செங்கற்கள் மற்றும் தச்சு உற்பத்திப் பிரிவு - (வேலைத்தள இலக்கம் 1099)

கடந்த 18 ஆண்டுகளில் 17 ஆண்டுகளிலும் நட்டமடைந்துள்ள இவ்வேலைத்தளத்தில் கடந்த ஆண்டில் ரூபா 4.3 மில்லியான செயற்பாட்டு நட்டம் மீளாய்வாண்டின் போது 92 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூபா 8.25 மில்லியான நட்டமொன்றாக மாறியிருந்தது. மேலும் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 38 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும், விற்பனைக் கிரயமல்லாத ஏனைய செலவினம் 68 சதவீதத்தினால் அதிகரித்தது.

(iii) முன்கலவை வேலைத்தளம் - பேலியகொடை (வேலைத்தள இலக்கம் 1168)

சீ சீரீ செயற்திட்ட நிர்மாணத்தின் போது தரையை தயாரித்தல் முறையாக முகாமை செய்யப்படாமையால் இவ்வேலைத்தளத்தில் இருந்த ரூபா 12,397,200 பெறுமதியான முன்கலவை உற்பத்தி அழிவடைந்திருந்ததாகவும் இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா மில்லியனான நட்டம் அடைந்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(iv) முன்கலவை வேலைத்தளம் - வெலிகந்த (வேலைத்தள இலக்கம் 1738)

கடந்த ஆண்டில் ரூபா ஒரு மில்லியனான செயற்பாட்டு இலாபமொன்று ஈட்டியிருந்த இந்த வேலைத்தளத்திலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 1.37 மில்லியன் நநட்டம் அடைந்திருந்தது. விற்பனைக் கிரயம் மற்றும் ஏனைய செலவினம் அதிகரித்தமை இந்நிலைமைக்கு தாக்கமளித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(v) கொங்கிரீட் சிலிப்பர் வேலைத்தளம் - (வேலைத்தள இலக்கம் 1510)

கடந்த ஆண்டில் ரூபா 43.27 மில்லியனான செயற்பாட்டு இலாபமொன்று ஈட்டியிருந்த இந்த வேலைத்தளத்திலிருந்து மீளாய்வாண்டில் செயற்பாட்டு இலாபம் ரூபா 25.42 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. மில்லியன் நட்டம் அடைந்திருந்தது. வேலைத்தளத்தில் வருமானம் 22 சதவீதத்தினால் குறைவடைந்தமை இந்நிலைமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(ஈ) இயந்திர மற்றும் செயற்பாட்டு வேலைத்தளம்

(i) பேலியகொடை செயற்பாட்டு வேலைத்தளம் - (வேலைத்தள இலக்கம் 102)

மேற்படி வேலைத்தளத்தில் 2013 ஆம் ஆண்டில் செயற்பாட்டு நட்டம் ரூபா 1.65 மில்லியனும் 2014 ஆம் ஆண்டின் போது அது ரூபா 3.86 மில்லியனும் மீளாய்வாண்டின் போது ரூபா 23.5 மில்லியனுமாக அது தொடர்ந்தும் 35.14 சதவீத வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. விற்பனை வருமானம் தொடர்ந்து விரைவாக குறைவடைந்தமை இந்நிலைமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(ii) பேலியகொடை செயற்பாட்டு வேலைத்தளம் - (வேலைத்தள இலக்கம் 104)

2013 ஆம் ஆண்டில் ரூபா 7.43 மில்லியன் செயற்பாட்டு இலாபம் கிடைத்திருந்த இவ்வேலைத்தளம் 2014 ஆம் ஆண்டின் போது அது ரூபா 1.33 மில்லியன் நட்டமொன்றாக வீழ்ச்சியடைந்திருந்தது. விற்பனை வருமானம் விரைவாக குறைவடைந்தமை, விற்பனைக் கிரயம் அதிகரித்தமை இந்நிலைமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தன.

(iii) மாத்தளை டொலமைட் வேலைத்தளம் - (வேலைத்தள இலக்கம் 1100)

மேற்படி வேலைத்தளத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது கடந்த 17 ஆண்டுகளில் 2006 ஆம் ஆண்டு தவிர ஏனைய அனைத்து வருடங்களிலும் இலாபத்துடன் பேணிச்செலப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது அது ரூபா 4.29 மில்லியனான செயற்பாட்டு நட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 10.23 மில்லியனான நட்டம் வரை 139 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் விற்பனை வருமானம் விரைவாக குறைவடைந்தமை இந்நிலைமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(iv) இரத்மலான வேலைத்தளம் - (வேலைத்தள இலக்கம் 888)

இவ் வேலைத்தளம் மீளாய்வாண்டின் போது ரூபா 23.95 மில்லியனான செயற்பாட்டு நட்டம் அடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டில் ரூபா 30.82 மில்லியனான வருமானம் ரூபா 5.75 மில்லியன் குறைவடைந்தமைக்கு விற்பனை கிரயம் மற்றும் ஏனைய செலவினமும் அதிகரித்தமையும் இந்நிலைமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(ஈ) விஷேட செயற்பாட்டு பிரிவு

கலபான அஸ்பொலட் வேலைத்தளம் (வேலைத்தள இலக்கம் 1843)

இவ்வேலைத்தளத்தில் 2013 ஆகஸ்ட் 01 ஆந் திகதி உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், உற்பத்தி நடவடிக்கைகள் 64 வேலை செய்யும் நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் வேலைத்தளத்திற்கு இணைக்கப்பட்டிருந்த ஊழியர்களை அவ்வேலைத் தளத்தில் வைத்து சம்பளம் கொடுப்பனவு செய்தமை காரணமாக கடந்த ஆண்டில் ரூபா 3.7 மில்லியன் ஆன நட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 15.53 மில்லியனான நட்டம் வரை அதிகரித்திருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 24.03 மில்லியனான திரட்டிய நட்டமொன்று அடைந்திருந்தது.

(உ) இயந்திர உபகரணப் பகுதி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இயந்திர உபகரணப் பிரிவில் கொலன்னாவ தலைமைக் களஞ்சியம் உட்பட பிரதேச அலுவலகங்கள் மற்றும் 23 வேலைத் தளங்களிலிருந்து எந்தவொரு வேலைத்தளத்திலிருந்தும் மீளாய்வாண்டின் போது இலாபத்தை பெற்றுக்கொள்ளாமல் இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் அடைந்திருந்த திரட்டிய நட்டம் ரூபா 177.73 மில்லியனாக இருந்தது.

(ii) வவுனியா, குருணாகல், குளியாபிட்டிய, ஆனமடுவ ஆகிய பிரதேச அலுவலகங்கள் கடந்த ஆண்டில் அடைந்திருந்த ரூபா 14.04 மில்லியனான திரட்டிய இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 23.88 மில்லியன் வரையான நட்டமொன்றாக குறைவடைந்திருந்தது.

(iii) கொலன்னாவ தலைமை அலுவலகம், ஹொரண, குண்டசாலை, அம்பாறை, கல்முனை, தமன்கடுவ ஆகிய பிரதேச அலுவலகங்கள் மற்றும் கேகாலை டிபோ ஆகிய வேலைத்தளங்களில் கடந்த ஆண்டு உட்பட மீளாய்வாண்டிலும் எவ்வித வருமானமேதும் உழைக்கப்படாமல் இருந்ததுடன், சம்பளம், வேதனங்கள், மின்சாரம், தொலைபேசி, எரிபொருள் மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 26.84 மில்லியனான செலவினமொன்று மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தன.

(iv) நிர்மாணம், இயந்திர மற்றும் இயந்திராதிகள் (M&E) பிரிவுகளுக்குரிய 03 வேலைத்தளங்களிற்காக ரூபா 1,065,550 கிரயமொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை எவ்வித செயன்முன்னேற்றமொன்றும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

காலப்பகுதி இறுதியின் போது கூட்டுத்தாபனத்திற்கான வங்கி மேலதிக பற்று எல்லை ரூபா 353.7 மில்லியன் ஆக இருந்த போதிலும், மீள்ர்வாண்டின் இறுதியில் அந்த மேலதிகப்பற்று எல்லை ரூபா 78 மில்லியன் வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பெறுமதி சேர் வரி அடிப்படையிலான வரிப்பதிவு செயற்படாத 09 வழங்குனர்களுக்கு பெறுமதி சேர் வரியாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகில் முறையே ரூபா 608,474 மற்றும் 182,950 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2002 இன் 14 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 1 ஆம் பட்டோலையின் 11 ஆம் பகுதியின் (a) (IV) மற்றும் (XVIII) இன் பிரகாரம் டீசல் மற்றும் கற்துர்ஸ் என்பன வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் வழங்குனரின் பட்டியலுக்காக பெறுமதி சேர் அடிப்படையிலன வரியாக ரூபா 4,752,280 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) அல்பிட்டிய அஸ்பலட் உற்பத்தி வேலைத்தளத்தை நிறுவுவதற்காக குத்தகை அடிப்படையில் காணியொன்றைப் பெற்றுக்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்ளாமலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதியை பெற்றுக்கொள்ளாமலும் 780/53 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் மாதாந்தம் ரூபா 50,000 வீதம் 05 ஆண்டு காலப்பகுதிக்காக 2012 செப்தெம்பர் 07 ஆந் திகதி ரூபா 3,000,000 ஆன குத்தகை பணம் ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே நிறுத்தப்பட்டிருந்தது.

(ii) காணி உரிமையாளரால் காணியின் கருங்கல் வேலைத்தளமொன்றை நடாத்திச் செல்வதற்காக 2012 பெப்ரவரி முதல் ஓராண்டு காலத்திற்காக எழுத்து மூல அனுமதியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது CATICC (Chin National Aero Technology Import Export Cooperation) நிறுவனத்தின் மூலம் இவ்விடம் அஸ்பலட் உற்பத்திக்கு பொருத்தமற்றதென தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்குரிய ஏனைய செலவினமாக ரூபா 1,515,524 செலவிடப்பட்டிருந்தது.

### (ஆ) கலபாத அஸ்பலெட் மற்றும் கிரஷர் இயந்திர வேலைத்தளம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூலப்பொருட்களை வழங்கலுக்காக மீளாய்வாண்டின் போது வழங்குனருக்கு முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 29,642,269 கூட்டுத்தொகைக்கான மூலப்பொருட்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இச்செயற்திட்டத்திற்காக 2016 திசெம்பர் 25 ஆந் திகதி வரை 02 ஆண்டுகளுக்காக ரூபா 1,800,000 ஆன வாடகை பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 03 நாட்கள் மாத்திரம் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 279.36 தொன் அஸ்பொலட் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதன் திரட்டிய நட்டம் ரூபா 25,580,485 ஆக இருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் ஓய்வூதிய பணிக்கொடை உரிய திகதியில் செலுத்தப்படாமையால் மூன்று ஊழியர்களுக்கு மிகை கட்டணமாக ரூபா 255,567 தொகை கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இரத்தினபுரி மாவட்டத்தில் வீதி நிர்மாணத்திற்காக 2011 ஆம் ஆண்டின் போது 52 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், 26 ஒப்பந்தங்களுக்காக ஒப்பந்த பெறுமதியை விஞ்சி ரூபா 53,198,183 தொகை ஒப்பந்தகாரர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் ஊடாக 5 செயற்திட்டங்கள் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 36,385,693 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை (Mobilization Advance) அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 ஏனைய அரச நிறுவகங்களுக்கு கையளிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக பணிப்பாளர் சபை அங்கீகாரமொன்று இல்லாமல் கூட்டுத்தாபனத்தின் 29 ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஊழியர்களின் சம்பளமக 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 31,638,155 தொகையும் 2016 சனவரி முதல் மே மாதம் வரை ரூபா 4,804,200 தொகையுமாக மொத்தம் ரூபா 36,442,355 தொகை கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டு அமைய ஊழிர்கள் பணிப்பாளர் சபை அங்கீகாரமொன்று இல்லாமல் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், 2016 சனவரி 01 முதல் ஒக்தோபர் 31 வரை ரூபா 698,580 ஆன சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நாளாந்த சம்பள அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிற்சி பெறாத 05 ஊழியர்கள் பணிப்பாளர் சபை அங்கீகாரமொன்று இல்லாமல் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஊழியர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய சம்பளம் கணக்கீடு செய்யப்படமல் 2016 சனவரி 01 முதல் யூன் 30 வரை ரூபா 500,000 சம்பள முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.7 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீடமைப்பு நிர்மாண செயற்திட்டப் பரிசோதனை – காலிங்க மாவத்தை

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் 12/1165/503/83 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 816 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் இவ்வொப்பந்தம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் 648 வீட்டு அலகுகள் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு இரு தரப்பும் இணங்கியிருந்தது. இச்செயற்திட்டங்கள் 02 கட்டங்களில் செயற்படுத்துவதற்கும் முதலாவது கட்டம் 2015 திசெம்பர் 19 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2015 யூன் 04 ஆந் திகதியின் பின்னர் வேலை நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 02 ஆம் கட்டத்தின் கீழ் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2014 ஏப்ரல் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது 2016 ஒக்தோபர் 21 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் அச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

(இ) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.4(1) பிரிவிற்கு முரணாக உப ஒப்பந்த பெறுமதியில் 20 சதவீதத்தை மிகைத்து ரூபா 4,803,492 வேலை ஆரம்பிப்பு முற்பணம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஒப்பந்த பெறுமதி ரூபா 83.5 மில்லியன் தொகையான இரண்டு உப ஒப்பந்தங்களின் காலம் 2015 மார்ச் 19 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், அதன் பௌதீக செயன்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இந்த ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3.9 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தின் பெறுமதி அறவிடப்படாதிருந்ததுடன் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 4.2 மில்லியனான முற்பணப் பிணைமுறிகளின் செல்லுபடிக்காலம் முடிவடைந்திருந்த போதிலும் அதனை நீடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபனத்தின் சீரற்ற நிதிக்கட்டுப்பாடு மற்றும் ஒப்பந்தகாரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக நிர்மாணத்தின் பௌதீக செயன் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,704,907,440 தொகையான காலிங்க மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இரண்டு வீடமைப்பு செயற்திட்டங்களை நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2010 ஆம் ஆண்டின் போது சேவை நாடுகளிடமிருந்து ரூபா 27,596,156 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் இதுவரை அதற்காக எவ்வித சேவையொன்றும் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

## 4.8 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் ஒப்பிடும் போது சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 21 பதவிகளுக்குரிய 65 உத்தியோகத்தர்களும் மூன்றாம் மட்ட முகாமைத்துவ மட்டத்தில் 39 பதவிகளுக்குரிய 139 உத்தியோகத்தர்கள் உட்பட திரட்டிய பதவியணியில் 101 பதவிகளுக்கு உரிய 559 ஊழியர்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடங்களாகக் காணப்பட்டன.

(ஆ) சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் பல பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் 06 பதவிகளுக்காக 6 உத்தியோகத்தர்களுக்கு உயர் சம்பள அளவின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கைக்கு மாத்திரமே நியமனம் வழங்க முடியும். எனினும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 41 பதவிகளுக்காக 451 மிகை ஊழியர்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

(ஈ) 2006 ஆகஸ்ட் 01 திகதிய 28(ii) முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2009 நவம்பர் 25 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ3/43/4/265/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகார மொன்றில்லாமல் பதவிகளை ஏற்படுத்துவதற்கோ அல்லது வெற்றிடங்களை நிரப்புவதோ மேற்கொள்ளப்படக்கூடாத போதிலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகார மொன்றில்லாமல் மேற்குறித்த 451 மிகை ஊழியர்களில் அங்கீகரிக்கப்படாத 13 பதவிகளுக்காக 16 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அதில் 7 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த ஊழியர்களின் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(உ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயிற்சி பெறாத 99 ஊழியர்கள் மிகையாக இருக்கும் போது 2016 சனவரி 31 இல் உள்ளவாறு 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் அமைய மற்றும் பயிற்சி பெறாத 300 ஊழியர்கள் பணிப்பாளர் சபை அங்கீகாரம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல் நாளாந்த சம்பள அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு ரூபா 74,107,520 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) பணிப்பாளர் சபை அங்கீகாரமொன்று இல்லாமல் அசாதாரணத்திற்கு உட்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக தலைவரால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூன்று உறுப்பினர்களில் இரண்டு பேர் கூட்டுத்தாபனத்தின் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களாக (பிரதி பொது முகாமையாளர் மனித வளம் மற்றும் நிர்வாகம் மற்றும் சட்ட உத்தியோகத்தர்) ஆக இருந்தமையால் சமர்ப்பிக்கப்பட்டும் பரிந்துரைகளின் சுயாதீனமான தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை தொடர்பாக கண்ககாய்வின் போது திருப்தி அடைய முடியாதிருந்தது.

மேலும், அக்குழுவினால் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.10 பிரிவின் பிரகாரம் நியமன அதிகாரியால் எந்தவொரு காரணமொன்று அல்லது தாபனப் பணிப்பாளரின் அங்கீகாரம் இல்லாமல் நியமனமொன்று முந்திகதியிடப்பட்டு வழங்க முடியாத போதிலும், அதற்கு முரணாக முகாமைத்துவ சேவை உதவியாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கணக்காளர் போன்ற பதவிகளுக்காக நியமிக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களுக்காக முறையே 07 வருடங்கள், 06 வருடங்கள், மற்றும் 02 வருடங்கள் 06 மாதங்கள் முற்திகதியிடப்பட்ட நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

மேலும், இந்த உத்தியோகத்தர்களுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி முன் திகதியிடப்பட்ட திகதி முதல் அமுலாகும் வரையில் புதிய பதவிகளுக்குரிய நிலுவை சம்பளம் மற்றும் சேவையை இடைநிறுத்தியிருந்த ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்காக சம்பளமாக ரூபா 948,175 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) மேலும், தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.11 மற்றும் 1.11.1 பந்திகளின் பிரகாரம் நியமனமொன்றை முன்கூட்டியே வழங்குவதன் காரணமாக அப்பதவிக்கு அல்லது தரத்திற்கு அவருக்கு முன்னர் நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரை விட சிரேஷ்டத்துவம் உரித்தானால் முன்கூட்டியே நியமனம் வழங்கப்படக்கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிர்வாக உத்தியோகத்தர் நியமனம் முற்கூட்டியே வழங்கப்பட்டதன் காரணமாக மேற்குறித்த பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டுத்தாபனம் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.10, 1.10.2, 1.11 மற்றும் 1.11.1 பந்திகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் அப்பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மீறப்படும் வகையில் புலனாய்வு குழு மூலம் பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை மேற்குறித்த அவதானிப்புகள் மூலம் கண்டறியப்பட்டது.

(எ) கூட்டுத்தாபனத்தின் பதில் கடமை நியமனம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தில் உயர்மட்ட மற்றும் நடுத்தர முகாமைத்துவ மட்டத்திற்குரிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 12 உத்தியோகத்தர்கள் 2015 ஆம் ஆண்டில் பதில் கடமை பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ii) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 பந்தியின் பிரகாரம் பதில் கடமை புரியும் பதவிகளுக்காக நிரந்தர நியமனத்தை தாமதமின்றி வழங்குதல் நிறுவனத்தின் பொறுப்பாக இருப்பதுடன் மேற்குறித்த உத்தியோகத்தர்களுக்கிடையே பலர் 01 ஆண்டு முதல் 11 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் பதில கடமை நிறைவேற்றுவதாகவும் அப்பதவிகளுக்காக நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு கணக்காய்வு திகதியான 2016 ஆகஸ்ட் மாதம் 12 ஆந் திகதி வரை கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(iii) கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட பொறியியலாளராக நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தரொருவர் நிர்மாண உப பாகங்கள் பிரிவின் பதில் பிரதி பொது முகாமையாளராக கடமை புரிவதற்காக ஈடுபடுத்தப்பட்டமை அந்த உத்தியோகத்தரிடம் காணப்படும் வேலை செய்யும் இயலுமை தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் பதில் கடமை சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக உரிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் பதில் கடமை சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் வரைவு அறிக்கை மற்றும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 436 நாட்கள் கால தாமதத்தின் பின்னர் 2017 மே 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது மீளாய்வாண்டிற்காக அது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெரப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 46 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையான வீச்சில் கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.5 ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தால் 2014 ஆம் ஆண்டிற்கு உரித்தான ஆண்டறிக்கை 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.6 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குரிய பேலியகொடையில் அமைந்துள்ள காணியிலிருந்து 2.5 ஏக்கர் பரப்பளவிலான காணி பயன்படுத்தப்பட்டு நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் ரூபா 36 மில்லியன் செலவு செய்து தொழில்நுட்ப சேவை பூங்காவொன்றும் குறைந்த செலவின சில வீடமைப்பு மாதிரிகளையும் நிர்மாணித்திருந்தது. இந்நிர்மாண நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 2.2 மில்லியன் தொகை கிடைக்க வேண்டியிருந்தது. எனினும் வேலைத்தளத்தில் பாதுகாப்பு சேவைகளுக்காக 2014 ஆம் ஆண்டிலிருந்து 2015 வரை ரூபா 1.2 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் அதனை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. கூட்டுத்தாபனத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பேலியகொடை – சீ சீரீ செயற்திட்டம் 2013 யூலை 06 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2014 சனவரி 31 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2015 செப்தம்பர் 03 ஆந் திகதியளவிலும் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தினால் ரூபா 463 மில்லியனாக இருந்ததுடன் அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட 18 செலவின விடயங்களில் 12 செலவின விடயங்களுக்குரிய நிர்மாணச் செயற்பாடுகளில் எவ்வித செயன்முன்னேற்றமொன்றும் அவதானிக்கப்படவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) செலுத்த வேண்டிய வரி மற்றும் அதற்காக மிகை கட்டணம் கணக்கீடு செய்யப்படாமை. |
| | (iii) கட்டுப்பாட்டுக் கணக்குகள் இணக்கம் செய்யப்படாமை. |
| | (iv) குறித்த திகதியில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | (i) கட்டளையுடன் காசோலைகள் மூலம் முற்பணம் வழங்கல். |
| | (ii) நீண்டகாலமாக இருந்து வரும் கடன் பட்டோரிடமிருந்து பணம் அறவிடாமல் காணப்படல் மற்றும் கடன்பட்டேர் கட்டுப்பாடு பலவீனமான நிலைமையில் இருத்தல். |
| | (iii) உரிய சேவை பெறுனர்களுக்காக மாதிரிப்பட்டியல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக கருத்திற்கொள்ளக்கூடிய தாமதம் காணப்படல். |
| | (iv) கொள்வனவு முற்பணம் தீர்க்கப்படாமல் நீண்டகாலமாக காணப்படல். |
| | (v) நீண்டகால நிர்மாணங்களின் நிறுத்தி வைத்தல் பணம் தீர்வுசெய்யப்படாமை |
| (இ) வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய பணம் | (i) வேலை தொடக்க முற்பணங்கள் தீர்வுசெய்யப்படாமல் நீண்டகாலமாக காணப்படல். |
| | (ii) வரி குறித்த திகதியில் செலுத்தப் படாமையால் மிகை கொடுப்பனவு செலுத்த நேர்ந்தமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பதவியணியினர் முகாமைத்துவம் | (i) | மனித வளங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவித்தல். |
| | | (ii) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல். |
| | | (iii) | ஒப்பந்த அடிப்படையில் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்காக உத்தியொகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தல். |
| (உ) | சொத்துக்கள் முகாமைத்துவம் - | (i) | விளைவற்ற சொத்துக்களை முறையாக பயன்படுத்துவதற்கு நடடிக்கை எடுக்கப்படாமை. |
| | | (ii) | காணிகளின் உரித்து கையேற்கப்படாமை. |
| (ஊ) | இருப்புக் கட்டுப்பாடு | | சகல வேலைத்தளங்களிலும் வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளப்படாமை. |